ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2493/36 - 2026 ජූනි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.18

2493/36 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
2026, யூன் 18

ஒழுங்குவிதிகள்

1. **எடுத்துக்காட்டல்:**

இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2026, யூன் 20 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. **காப்பு ஏற்பாடுகள்:**

2.1. 2021, பெப்புருவரி 03 ஆம் திகதிய 2213/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) ஒழுங்குவிதிகள், அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட எதற்கும் முற்கற்பிதமின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

2.2. மேற்குறித்த ஒழுங்குவிதிகள் இரத்துச் செய்யப்பட்டு, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட போதிலும், சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட எந்தவொரு கட்டளையும் அத்தகைய கட்டளையின் காலப்பகுதியில் தொடர்ந்து நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

2.3. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அல்லது விசேட அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் தற்போதுள்ள கடல்கடந்த முதலீடு இவ்வொழுங்குவிதிகள் அல்லது ஏதேனும் அதனைத்தொடர்ந்து வந்த ஒழுங்குவிதிகளினால் குறிப்பாக மாற்றியமைக்கப்படாத வரையில், அத்தகைய மூல அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உட்பட்டுத் தொடரலாம்.

3. **இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகள்**

3.1. *தகவுடைய ஆட்கள்:*

இலங்கையில் வதிகின்ற பின்வரும் ஆட்கள் இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகள், நடைமுறைகள் மற்றும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உட்பட்டு, இவ்வொழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்வதற்குத் தகவுடையவர்களாதல் வேண்டுமெனினும், கீழே (ஆ) தொடக்கம் (ஈ) வரை குறிப்பிடப்பட்டுள்ள வதிவுள்ளோர் இலாபம் ஈட்டுகின்ற நோக்கத்துடன் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

அ) புலம்பெயர்ந்தோர் மற்றும் தேசத்தவரல்லாதோர் தவிர்ந்த தனிப்பட்ட வதிவுள்ளவர்கள்.

ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்காண்மைகள்.

இ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கையின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு.

ஈ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய ஓய்வூதிய நிதியங்கள்.

3.2. *அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த முதலீடுகள்:*

3.2.1. புலம்பெயர்ந்தோர் மற்றும் தேசத்தவரல்லாதோர் தவிர்ந்த தனிப்பட்ட வதிவோர் கடந்கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்களில் மாத்திரம் முதலீடுகளினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

3.2.2. இவ்வொழுங்குவிதிகளின் 3.1 (ஆ) தொடக்கம் (ஈ) வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவுடைய ஆட்கள் இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகள், நடைமுறைகள் மற்றும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உட்பட்டுப் பின்வரும் கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

(அ) அத்தகைய கம்பனியின் பெரும்பான்மையான வாக்களிக்கின்ற உரிமைகளினை முதலீட்டாளர்களிற்கு உரித்தளிக்கின்ற அல்லது அத்தகைய கம்பனியின் பெரும்பான்மையான பணிப்பாளர்கள் அல்லது அதற்கு இணையான முகாமைத்துவப் பதவிகளினை நியமிப்பதற்கான உரிமையினை வேறுவகையில் வழங்குகின்ற அல்லது சட்டபூர்வமாகப் பிணிக்கின்ற உடன்படிக்கைகள் அல்லது ஏற்பாடுகள் மூலம் அத்தகைய கம்பனியின் கூட்டாண்மைத் தீர்மானங்களினைக் கட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்த அல்லது சட்டரீதியிலான உரிமையினை வழங்குகின்ற இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள்.

(ஆ) ஏற்புடைத்தாகின்றவாறு, இவ்வொழுங்குவிதிகளின் 3.1 ஆம் பந்தியின் (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவுடைய ஆட்களினால் கடல்கடந்த அலுவலகங்களில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள்.

3.3. *கடல்கடந்த முதலீடுகளிற்காக அனுமதிக்கப்பட்ட வரையறைகள்:*

3.3.1. கடல்கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்கள் தவிர்ந்த மேலே 3.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடல்கடந்த முதலீடுகள் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள் கீழே உள்ள **அட்டவணை 1** இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளிற்கு உட்பட்டதாகக் காணப்பட வேண்டும்.

அட்டவணை 1: கடல்கடந்த முதலீடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான வரையறைகள்

	அ. தகவுடைய ஆட்களின் வகை	ஆ. ஏற்புடைத்தாகின்ற வரையறை (ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லது அதற்கு நி-கராக வேறு ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்)
அ.	இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்காண்மைகள்	ஆயுள் காலத்திற்காக உயர்ந்தபட்சமாக 50,000 அல்லது உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு பங்குதாரர்களின் பங்குரிமை மூலதனத்தில் 20 சதவீதம், இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாகும்.
ஆ.	2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கையின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள்	ஆண்டொன்றிற்கு உயர்ந்தபட்சமாக 2,000,000 அல்லது உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு தேறிய சொத்துக்களில் 20 சதவீதம், இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாகும்.
இ.	மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வங்கிகள்	திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதித்தொழில் என்பவற்றின் விரிவாக்கத்திற்காக அதன்கீழ் விடுக்கப்பட்ட துணைச் சட்டவாக்கம் என்பவற்றிற்கு உட்பட்டன.
ஈ.	மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள்	திருத்தப்பட்டவாறான 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிதித்தொழில் என்பவற்றின் விரிவாக்கத்திற்காக அதன்கீழ் விடுக்கப்பட்ட துணைச் சட்டவாக்கம் என்பவற்றிற்கு உட்பட்டன.
உ.	இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்.	ஆண்டொன்றிற்கு உயர்ந்தபட்சமாக 500,000 அல்லது உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு தேறிய சொத்துக்களில் 20 சதவீதம், இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாகும்.
ஊ.	2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது மேலே ஆ. தொடக்கம் உ. வரையிலான விடயங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தவிர்ந்த இலங்கையின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள்.	ஆண்டொன்றிற்கு உயர்ந்தபட்சமாக 500,000 அல்லது உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு தேறிய சொத்துக்களில் 20 சதவீதம், இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாகும்.

எ.	1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஓய்வூதிய நிதியங்கள்.	ஆண்டொன்றிற்கு உயர்ந்தபட்சமாக 500,000 அல்லது உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு தேறிய சொத்துக்களில் 20 சதவீதம், இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாகும்.

3.3.2. மேலே அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்கு (அதாவது ஆண்டிற்கு அல்லது ஆயுள் காலத்திற்காக ஏற்புடைத்தாகின்றவாறு) மற்றும் நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பொது அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகள் உள்ளடங்கலாக கூட்டாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

3.3.3. புலம்பெயர்ந்தோர் மற்றும் தேசத்தவரல்லாதோர் தவிர்ந்த தனிப்பட்ட வதிவுள்ளவர்களினால் கடல்கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் ஐக்கிய அமெரிக்க டொலர் 20,000 அல்லது ஏனைய பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்கு நிகரான தொகையிலான வருடாந்த கூட்டு வரையறையொன்றிற்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன.

3.3.4. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளர்களிற்கான மேலதிக வரையறை

பொருட்கள் மற்றும் பணிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கையின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் இலங்கையில் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள் மேலே அட்டவணை 1இன் நிரல் ஆ இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளிற்கு மேலாக மேலதிக வரையறையொன்றிற்கு உரித்துடையனவாகக் காணப்படுகின்றன. மேலதிக வரையறையானது 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தபட்ட இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளினை இலங்கைக்கு மீளனுப்பல் தொடர்பான விதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உடனடியாக முன்னைய நிதியியல் ஆண்டில் இலங்கைக்கு மீளனுப்பப்பட்டு, இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் 10 சதவீதத்திற்கு (10%) சமமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இது கம்பனியின் கணக்காய்வாளரினால் சான்றளிக்கப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் கணிக்கப்பட வேண்டும்.

3.4. *கடல்கடந்த முதலீடுகளிற்காக நிதியங்களின் முறைமைப்படுத்தல்* :

3.4.1. இவ்வொழுங்குவிதிகளின் 3.2 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த முதலீடுகளுடன் தொடர்புடைய வெளிமுகப் பணவனுப்பல்கள் இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் இவ்வொழுங்குவிதிகளின் 3.1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகவுடைய ஆட்களினால் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் திறந்து, பேணப்படுகின்ற வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4.2. கடல்கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்களில் முதலீடுகளினை மேற்கொள்வதற்கான பிரதிபயனானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாயுள்ள அல்லது இலங்கையின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் இலங்கையில் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களாயுள்ள தொழில்தருநரினால் வதிவுள்ள ஊழியர்கள் சார்பாகச் செலுத்தப்படுகின்றவிடத்து, தனிப்பட்ட முதலீட்டாளரொருவராக இருக்கின்ற ஒவ்வொரு ஊழியர் சார்பாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரிடமிருந்து ஓம்படுகைகளினைப் பெற்றுக்கொள்வதன் மேல் 3.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குட்பட்டு கடல் கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய நிதியங்களினை முறைமைப்படுத்தும் நோக்கத்திற்காக மாத்திரம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் அத்தகைய தொழில்தருநரினால் திறந்து, பேணப்படுகின்ற வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து மொத்தத் தொகைக் கொடுப்பனவொன்றாக வெளிமுகப் பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்படலாம்.

3.4.3. வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினைத் திறத்தலும் பேணுதலும்

அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்வதற்குத் தகவுடைய ஆட்கள் வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்வதற்கும் கடல்கடந்த முதலீடுகள் தொடர்பான ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளினைப் பெற்றுக்கொள்வதற்கும் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நேரத்தில் சேமிப்பு அல்லது நடைமுறை ஆகிய இரண்டிலொரு கணக்கின் வடிவில் ஒரேயொரு வெளிமுக முதலீட்டுக் கணக்கினைத் திறந்து, பேணலாம்.

ஆ) வதிவுள்ள முதலீட்டாளர்களினால் பேணப்படும் பல வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் காலக்கெடுவினை மத்திய வங்கியானது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்குப் பணிப்புரைகளினை வழங்குவதன் மூலம் பரிந்துரைக்க வேண்டும்.

இ) மேலே 3.4.3 (அ) பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கிற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகளின் வருமானம் அல்லது மூலதன வருவாய்களினைப் பயன்படுத்தித் தவணை வைப்புக்களின் வடிவில் மாத்திரம் ஒன்றிற்கு மேற்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினைத் தகவுடைய ஆட்கள் திறந்து பேணலாம். அத்தகைய தவணை வைப்புக்களின் அனைத்து வருமானங்களும் மூலதனப் பெறுகைகளும் மேலே 3.4.3 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிற்கு மீண்டும் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஈ) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளிற்கு அமைய இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கடல்கடந்த முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தகவுடைய ஆட்களின் பெயரில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திறந்து, பேண வேண்டும்.

3.5. *வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் ஊடாக கடல்கடந்த முதலீடுகளிற்காக வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்வதற்கான முன்கூட்டிய தேவைப்பாடுகள்:*

கடல்கடந்த முதலீடுகளுக்காக ஒவ்வொரு வெளிமுகப் பணவனுப்பலினையும் செயலுறுத்துவதற்கு முன்னர் தகவுடைய ஆளொருவர் தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அ) உடனடியாக முன்னைய மூன்று (3) நிதியியல் ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள். இத்தேவைப்பாடானது தனிநபர்களுக்குப் ஏற்புடையதாயமைவதில்லை.

ஆ) அதனைத்தொடர்ந்த கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக இவ்வொழுங்குவிதிகளின் 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன்னைய முதலீடுகள் தொடர்பான அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இசைந்தொழுகுதல். முதன்முறையாக கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்கின்ற முதலீட்டாளர்களுக்கு இத்தேவைப்பாடு ஏற்புடையதாயமைவதில்லை.

இ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பரிந்துரைத்து, வெளியிடப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க எதிர்பார்க்கப்படுகின்ற நிதியியல் செயலாற்றத்தின் அடிப்படையிலமைந்த முன்மொழியப்பட்ட முதலீட்டினைப் பரிந்துரைக்கின்ற இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சுயாதீனமான இணையுறுப்பினரொருவரின் அல்லது பட்டய நிதியியல் பகுப்பாய்வு நிறுவனத்தின் (ஐக்கிய அமெரிக்கா) பட்டயம் வைத்திருப்பவரொருவரின் ஓர் அறிக்கை.

ஈ) முதலீட்டாளருக்கு எதிராக நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிலுவையில் வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது விசாரணைகள் எவையும் காணப்படுவதில்லையென்பதையும் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய வழக்குத் தொடர்தல், விசாரணைகள் அல்லது எந்தவொரு அறவீட்டு நடவடிக்கைகளும் காணப்படுவதில்லையென்பதையும் உறுதிப்படுத்தி ஒவ்வொரு கடல்கடந்த முதலீட்டிற்கும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் ஓம்படுகைக் கடிதம்.

3.6. *கடல் கடந்த முதலீடுகளிற்கான ஓம்படுகைக் கடிதங்களினை வழங்குதல்:*

3.6.1. மேலே 3.5 ஆம் பந்தியின் (ஈ) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஓம்படுகைக் கடிதத்திற்கான விண்ணப்பமொன்று வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பரிந்துரைக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்கானது எவ்வதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் பேணப்படுகின்றதோ அவ்வதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.6.2. விண்ணப்பத்தினை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, தேவையான தகவல்கள், ஆவணப்படுத்தல் மற்றும் மேலே 3.6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் என்பவற்றினைச் சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக விண்ணப்பதாரரும் முன்மொழியப்பட்ட முதலீடும் இவ்வொழுங்குவிதிகளின் அனைத்துத் தேவைப்பாடுகளுடனும் இசைந்து செல்வதினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் நிச்சயப்படுத்த வேண்டும்.

3.7. *கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருமானம் மற்றும் மூலதன வரும்படிகளின் பெறுகை:*

3.7.1. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்வதன் மூலம் கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எந்தவொரு வருமானம் அல்லது எந்தவொரு மூலதனப் பெறுகைகளும் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும்.

3.7.2. சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் அறிமுகத்திற்கு முன்னர், நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை ரூபாவினை மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எந்தவொரு வருமானம் அல்லது எந்தவொரு மூலதன பெறுகையும் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள், வதிவுள்ள முதலீட்டாளரினால் திறந்து, பேணப்படும் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும்.

3.7.3. சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கை ரூபாவினை பகுதியளவில் மாற்றுவதன் மூலமும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள வங்கிக் கணக்கொன்றின் வசமிருந்த ஏதேனும் வெளிநாட்டுச் சொத்து அல்லது வெளிநாட்டுச் செலாவணியினைப் பகுதியளவில் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகள் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள் வதிவுள்ள முதலீட்டாளரினால் திறந்து, பேணப்படும் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிக் கணக்கொன்றிலுள்ள ஏதேனும் வெளிநாட்டுச் சொத்து அல்லது வெளிநாட்டுச் செலாவணியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் விகிதாசாரமானது மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளிற்கிணங்க இலங்கை ரூபாவில் அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்பட்ட தகவுடைய வங்கிக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கு அத்தகைய வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்து மாற்றப்படலாம்.

3.7.4. மேலே 3.4.2 ஆம் பந்தியின் கீழ் வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்வதன் மூலம் (அதாவது, இலங்கையிலுள்ள தொழில்தருநரினால் செலுத்தப்பட்டது) கடல்கடந்த ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்கள் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செயற்றிட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகள் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள் அத்தகைய பந்தியின் நோக்கத்திற்காகத் தொழில்தருநரினால் திறந்து, பேணப்படும் வெளிமுக முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர், தனிப்பட்ட ஊழியர்களின் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளிற்கு மாற்றப்படலாம்.

3.8. ***இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்ட வருமானம் மற்றும் மூலதனப் பெறுகைகளின் பயன்பாடு*** :

தகவுடைய ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்டதும் இவ்வொழுங்குவிதிகளிற்கமைய இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்குப் பின்னர் அத்தகைய ஆட்களின் வெளிமுக முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்காக இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டதுமான ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகள் இவ்வொழுங்குவிதிகளின் 3.3 மற்றும் 3.5 ஆகிய பந்திகளிற்கு உட்படாமல் அத்தகைய ஆட்களின் அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த முதலீடுகளுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

4. வங்கிக் கணக்குகளின் வசமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் அல்லது வெளிநாட்டுச் செலாவணியினைப் பயன்படுத்திக் கடல்கடந்த சொத்துக்களினைக் கையகப்படுத்தல் மற்றும் கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்ளுதல்

4.1. இவ்வொழுங்குவிதிகளின் 3 ஆம் பந்திக்குட்படாமல் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள வங்கிக் கணக்கொன்றின் வசமுள்ள ஏதேனும் வெளிநாட்டுச் சொத்துக்கள் அல்லது வெளிநாட்டுச் செலாவணியினைப் பயன்படுத்தி எந்தவொரு வதிவுள்ளவரும் வதிவற்றவரிடமிருந்து வெளிநாட்டுச் சொத்துக்களைக் கையகப்படுத்தலாம் அல்லது கடல்கடந்த முதலீடுகளினை மேற்கொள்ளலாம்.

4.2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே 4.1 ஆம் பந்தியின் நோக்கத்திற்காக மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளிற்கமைய வெளிமுகப் பணவனுப்பல்களினை மேற்கொள்ள வேண்டும்.

4.3. மேலே 4.1 ஆம் பந்தியின் கீழ் கையகப்படுத்தப்பட்ட கடல்கடந்த சொத்துக்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகையும் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஒரு (1) மாத காலத்திற்குள், மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளிற்கமைய இலங்கை ரூபாவில் அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறந்து, பேணப்படுகின்ற தகவுடைய வங்கிக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும்.

4.4. மேலே 4.3ஆம் பந்தியின் கீழ் இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டதும் ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுகின்ற தகவுடைய வங்கிக் கணக்கொன்றில் வரவு வைக்கப்பட்டதுமான வருமானம் மற்றும் மூலதனப் பெறுகைகள் கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கலிற்காகப் பயன்படுத்தப்படலாம்.

5. பிரதிபயனுக்காகாவன்றி வதிபவர்கள் மூலம் வெளிநாட்டுச் சொத்துக்களை கையகப்படுத்தல் அல்லது வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளுதல்

5.1. எவரேனும் வதிகின்றவர் (அதாவது கையகப்படுத்துபவர்) இவ்வொழுங்குவிதிகளின் மூன்றாம் பந்திக்கு உட்பட்டவராக இல்லாதிருக்கின்ற எவரேனும் வதியாதவரிடமிருந்து ஏதேனும் வெளிநாட்டுச் சொத்தினை கையகப்படுத்துவதற்கு அல்லது வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார், ஆயின், அத்தகைய கையகப்படுத்தலுக்காக அல்லது முதலீட்டுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை ரூபாய்களில் அல்லது ஏதேனும் சொத்து வடிவில் பிரதி-பயன் எதுவும் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு வேண்டப்படாதிருக்க வேண்டும். அத்தகைய கையகப்படுத்தல் அல்லது முதலீடு கையகப்படுத்துபவருக்கு ஏதேனும் கிடைப்பனவாகவிருக்கின்ற நிலுவையினை எதிரீடு செய்வதற்கு செயலுறுத்தல் வழங்கலாகாது.

5.2. மேலே 5.1 ஆம் பந்தியின் கீழ் வதிகின்றவர்கள் மூலம் கையகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களில் அல்லது வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வரும்படி, மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கமைவாக அத்தகைய கிடைப்பனவுத் திகதிகளிலிருந்து ஒரு (01) மாதத்தினுள் இலங்கை ரூபாவில் அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறந்து பேணப்படுகின்ற தகைமையுடைய வங்கிக் கணக்கொன்றின் வரவிற்கு இலங்கைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.

5.3. மேலே 5.2 ஆம் பந்தியின் கீழ் இலங்கைக்கு அவ்வாறு கொண்டுவரப்பட்ட அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுகின்ற தகைமையுடைய வங்கிக் கணக்கொன்றிற்கு வரவுவைக்கப்பட்ட வருமானம் அல்லது மூலதன வரும்படிகள் கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கலுக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு உபயோகிக்கப்படலாம்.

முதலீடுகளை

6. வதிகின்றவர்களால் வைத்திருக்கப்படும் வெளிநாட்டுச் சொத்துக்களின் அல்லது வெளிநாட்டு முதலீடுகளின் வழியுரிமை அத்துடன் பின்னுரிமை

6.1. சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தகைமையுடைய ஆட்கள் மூலம் கையகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் அத்துடன் வெளிநாட்டு முதலீடுகளின் சொத்தாண்மை, வழியுரிமையை மற்றும் பின்னுரித்தை நிர்வகிக்கின்ற இலங்கைச் சட்டங்களின் கீழ் எவரேனும் வதிகின்றவருக்கு அல்லது வதியாதோருக்கு ஊடுகடத்தப்படலாம்.

6.2. மேலே 6.1 ஆம் பிரிவின் கீழ் வதிகின்றவர்களால் கையகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து அல்லது வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறுவிக்கப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வரும்படி மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைவாக அத்தகைய கிடைப்பனவுத் திகதிகளிலிருந்து ஒரு (01) மாதத்தினுள் இலங்கை ரூபாவில் அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறந்து பேணப்படுகின்ற தகைமையுடைய வங்கிக் கணக்கொன்றின் வரவிற்கு இலங்கைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.

6.3. மேலே 6.2 ஆம் பந்தியின் கீழ் இலங்கைக்கு அவ்வாறு கொண்டுவரப்பட்ட அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுகின்ற தகைமையுடைய வங்கிக் கணக்கொன்றிற்கு வரவுவைக்கப்பட்ட வருமானம் அல்லது மூலதன வரும்படிகள் கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கலுக்கு அல்லது மூலதன கொடுக்கல்வாங்கலுக்கு உபயோகிக்கப்படலாம்.

7. வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுபவர்கள் சார்பில் உத்தரவாதங்களை அத்துடன் பாத்தியங்களை வழங்குதல்:

7.1. சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனிப்பட்டவர்கள் அத்துடன் பங்குடமைகளுக்கானவை (அதாவது வதிகின்ற முதலீட்டாளர்) தவிர எவரேனும் தகைமையுடைய ஆளினால் கையகப்படுத்தப்பட்ட இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் (அதாவது வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவர்) பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள், நிதியியல் நிறுவனங்களிடமிருந்து நிதியிடல் வசதிகளைத் திரட்டுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளரை இயலச்செய்வதற்கு பாத்தியமொன்றாக நிர்ணயிக்கப்படலாம். பாத்தியத்தின் பெறுமதி ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவரில் வதிகின்ற முதலீட்டாளரின் சதவீதப் பங்குடமைக்கு நேரொத்ததாகவிருக்கின்ற நிதியிடல் வசதியின் பாகத்தினை விஞ்சலாகாது.

7.2. எவரேனும் தகைமையுடைய தனிப்பட்டவர்கள் அத்துடன் பங்குடமைகளுக்கானவை தவிர (அதாவது வதிகின்ற முதலீட்டாளர்) நிதியியல் நிறுவனங்களிடமிருந்து நிதியிடல் வசதிகளைத் திரட்டுவதற்கு 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சொல்லப்பட்ட முதலீட்டாளர் எந்த முதலீட்டினை மேற்கொண்டுள்ளாரோ அந்த முதலீடு இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றை அல்லது வெளிநாட்டு அலுவலகமொன்றை (அதாவது வெளிநாட்டு முதலீட்டைப்பெறுபவர்) இயலச்செய்வதற்கு நிதியியல் உத்தரவாதமொன்றினை வழங்குவதற்கு கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில், பின்வருவனவற்றுக்குட்பட்டு நிறுவன உத்தரவாதமொன்று அல்லது வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்படலாம்:

(அ) ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் பிரதானமாக வங்கித்தொழில் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவர்களின் சார்பில் வதிகின்ற முதலீட்டாளர்களின் இயலளவில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்படும் உத்தரவாதங்களுக்கானவை தவிர வதிகின்ற முதலீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் உத்தரவாதங்களின் உயர்ந்தபட்ச கூட்டுப்பெறுமதி, ஐ.அ.டொலர் 1,000,000 அல்லது உடனடியாக முன்னுறுகின்ற ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுக்கமைவாக வதிகின்ற முதலீட்டாளரின் தேறிய சொத்துக்களின் 50 சதவீதம் கொண்ட பெறுமதியை, இதில் எது குறைவானதோ அது, விஞ்சலாகாது.

(ஆ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று சார்பில் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றின் வாயிலாக பொறுப்பேற்கப்பட்ட எதிர்பாரா பொறுப்பின் பெறுமதி ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவரில் வதிகின்ற முதலீட்டாளரின் சதவீதப் பங்குடமைக்கு நேரொத்ததாகவிருக்கின்ற நிதியிடல் வசதியின் பாகத்தை விஞ்சலாகாது.

(இ) ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் பிரதானமாக வங்கித்தொழில் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவர்களின் சார்பில் வதிகின்ற முதலீட்டாளர்களின் இயலளவில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்படும் உத்தரவாதங்களின் உயர்ந்தபட்ச கூட்டுப்பெறுமதி நிலுவுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைவாக மத்திய வங்கியின் இயைபுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) உத்தரவாதங்களை வழங்குவதற்கு முன்னர் வதிகின்ற முதலீட்டாளர் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய வழங்கப்படும் அத்தகைய உத்தரவாதங்களின் கீழ் வதிகின்ற முதலீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடும் நோக்கத்திற்காக வெளிநாட்டு முதலீட்டைப் பெறுபவருடன் பொருத்தமான சட்ட உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடல் வேண்டும்.

7.3. வங்கி உத்தரவாதங்களை வழங்குதல் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுத்தல்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

7.4. இவ்வொழுங்குவிதிகளில் 7.2 ஆம் பந்தியின் கீழ் வழங்கப்படும் உத்தரவாதங்கள் தொடர்பில் செல்லுபடியான உரிமைக் கோரிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற வெளிநோக்கிய பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ஆயின் அத்தகைய உரிமைக் கோரிக்கையொன்றின் உயர்ந்தபட்சத் தொகை தொடர்புடைய நிதியிடல் வசதிகளின் கீழ் நிலுவையாக இருக்கின்ற கடப்பாடுகளின் பெறுமதிக்கு அல்லது பெறுமதியின் பங்கிற்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7.5. மேலே 7.2 (ஈ) ஆம் பந்தியின் கீழ் அறவீடு செய்யப்படும் நிதியங்கள் வெளிமுகப் பணவனுப்பல் எந்த மார்க்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதோ (அதாவது கணக்கு) அதனூடாக இலங்கைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.

7.6. இவ்வொழுங்குவிதிகளின் செயலுறு திகதிக்கு முன்னர் 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளிநாட்டு முதலீட்டைப் பெறுகின்றவர் சார்பில் வதிகின்ற முதலீட்டாளர்களினால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் பொதுவான அனுமதியின் கீழ் அவற்றின் மீது அல்லது அவற்றுக்கு ஏற்புடையதாகவிருந்த அல்லது 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட விசேட அனுமதியின் மீது ஏற்புடையதாகவிருந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தொடர்ந்தும் செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டும்.

8. வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கையிடும் தகவல்கள்

8.1. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உரிய வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக வதிபவர்களால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் மீதான விரிவான தகவல்களை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிய பணிப்புரைகளால் குறித்துரைக்கப்படக்கூடியவாறு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2. இலங்கையில் வதிகின்றவர்களாகவிருக்கின்ற தகைமையுடைய ஊழியர்கள் சார்பில் வெளிநாட்டு ஊழியர் பங்குச்சொத்தாண்மைத் திட்டங்களில் அல்லது ஊழியர்கள் பங்குத் தெரிவுத் திட்டங்களில் முதலீடுகளுக்காக வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொண்ட தொழில்தருநர்களிருக்கின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கையின் ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் தாபிகப்பட்ட யாக்கங்கள் அத்தகைய பணவனுப்பல்களுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களை அத்துடன் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் வேறு தகவல்களையும் அத்தகைய பணவனுப்பல் திகதியிலிருந்து பதின்னான்கு (14) பஞ்சாங்க நாட்களுக்குள் உரிய அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஒவ்வொரு ஊழியரினதும் முழுப்பெயர் மற்றும் தேசிய ஆடையாள அட்டை இலக்கம்.

(ஆ) பணவனுப்பல் திகதி அத்துடன் ஒவ்வொரு ஊழியருக்குமான வெளிநாட்டுச் செலாவணியின் நேரொத்த தொகை.

(இ) பணவனுப்பல் எந்த கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதோ அக்கணக்கு பற்றிய விபரங்கள் (கணக்கு இலக்கம், கணக்கின் வகை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்).

(ஈ) இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கி தொடர்புடைய ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்திலிருந்து அல்லது ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டத்திலிருந்து பெறுவிக்கப்படும் ஏதேனும் வருமானத்தை அல்லது ஏதேனும் மூலதன வரும்படிகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு பெறுப்பேற்கின்ற ஒவ்வொரு ஊழியரிடமிருந்து சத்தியக்கூற்றொன்று.

8.3. பிரதிபயனின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் அல்லது வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக வெளிநாட்டுச் சொத்துக்களை அல்லது வெளிநாட்டு முதலீடுகளை வைத்திருக்கின்ற அனைத்து வதிகின்றவர்களும் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் திசெம்பர் 31 அன்று உள்ளவாறான பின்வரும் தகவல்களையும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரினால் விதித்துரைக்கப்படக்கூடிய எவையேனும் வேறு தகவல்களையும் அத்தகைய வெளிநாட்டு முதலீடுகளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அத்துடன்/அல்லது அத்தகைய சொத்துக்களிலிருந்து அல்லது முதலீடுகளிலிருந்து பெறுவிக்கப்பட்ட வருமானம் இலங்கைக்கு திரும்பிக் கொண்டுவரப்பட்ட அல்லது மூலதன வரும்படிகளை எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக மேற்கொள்ளப்பட்டதோ அவ்வணிகருக்கு தொடர்ந்துவருகின்ற பஞ்சாங்க ஆண்டின் மாச்சு 31 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வகை மற்றும் அமைவிடம் உள்ளடங்கலாக சொத்துக்கள் அல்லது முதலீடு பற்றிய விபரணம்.

(ஆ) கையேற்புத் திகதி.

(இ) கையேற்புச் செலவு வெளிநாட்டு நாணயத்தில்.

(ஈ) நடப்பு விலை மதிப்பீடு (கிடைக்கப்பெறுமாயின்).

(உ) முதலீடு மற்றும் சொத்து ஒவ்வொன்றிலுமிருந்து பெறுவிக்கப்பட்ட வருமான அல்லது மூலதன வரும்படிகள் பற்றிய விபரங்கள்.

(ஊ) இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வருமானம் மற்றும் மூலதன வரும்படிகள் பற்றிய விபரங்கள்.

8.4. வெளிமுகப் பணவனுப்பல் மேற்கொள்ளப்பட்டிராத அத்துடன் ஏதேனும் வருமானம் அல்லது எவையேனும் மூலதன வரும்படிகள் தேறி இருக்காத அல்லது வெளிநாட்டு ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டங்களில் அல்லது ஊழியர் பங்குத்தெரிவுத் திட்டங்களில் இலங்கையிலுள்ள தொழில்தருநர் ஒருவரின் கணக்கொன்றினூடாக வெளிமுகப் பணவனுப்பல் நேரடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற விடயத்தில் விலையீடின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் அல்லது வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக வெளிநாட்டுச் சொத்துக்களை அல்லது வெளிநாட்டு முதலீடுகளை வைத்திருக்கின்ற அனைத்து வதிகின்றவர்களும் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் திசெம்பர் 31 அன்று உள்ளவாறு அத்தகைய சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் மேலே 8.3 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களையும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரினால் விதித்துரைக்கப்படக்கூடிய எவையேனும் வேறு தகவல்களையும் தொடர்ந்து வருகின்ற பஞ்சாங்க ஆண்டின் மாச்சு 31 அன்று அல்லது அதற்கு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் விதித்துரைக்கப்பட்டு வெளியிடப்பட்ட படிவத்திற்கமைவாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணக்களத்தின் ஆணையார் நாயகத்திற்கு நேரடியாக சுய பிரகடனம் வாயிலாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8.5. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே 8.3 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்களை மத்திய வங்கியினால் வழங்கப்படும் உரிய பணிப்புரையில் விதித்துரைக்கப்படக்கூடியவாறு ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் யூன் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு அத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8.6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இவ்விதிகளின் 7 ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களினதும் பாத்தியத்தினதும் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களினதும் விரிவான தகவல்களை மத்திய வங்கியினால் வழங்கப்படும் உரிய பணிப்புரையில் விதித்துரைக்கப்படக்கூடியவாறு ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் யூன் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8.7. இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் பந்தியின் கீழ் நிறுவன உத்தரவாதங்களை அல்லது பாத்தியங்களை எந்த வதிகின்ற ஆட்கள் வழங்கியுள்ளனரோ அவ் ஆட்கள் அத்தகைய உத்தரவாதங்களின் அல்லது பாத்தியங்களின் அத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை உத்தரவாதம் அல்லது பாத்தியம் வழங்கும் திகதியிலிருந்து அல்லது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் செயலுறு திகதியிலிருந்து, விடயத்திற்கேற்ப பதினான்கு (14) பஞ்சாங்க நாட்களுக்குள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. புலம் பெயர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான பரிகாரம்:

வதிகின்ற தனிப்பட்டவரொருவர் புலம்பெயர்ந்த ஒருவராகின்ற போது இலங்கையில் வதிபவரொருவராகவிருக்கையில் (அதாவது புலம்பெயர்தலுக்கு முன்னர்) 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை ரூபாய்களாக மாற்றுவதன் மூலம் அத்தகைய புலம்பெயர்ந்தவரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த பெறுமதி அல்லது அத்தகைய புலம்பெயர்ந்தவரினால் வழியுரிமையாகப் பெறப்பட்ட / அன்பளிப்பாக வழங்கப்பட்ட இலங்கை ரூபாய்களாக மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி முதலீடு எந்நாட்டில் மேற்கொள்ளப்பட்டதோ அந்நாட்டைப் பொருட்படுத்தாது திருத்தப்பட்டவாறான சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு தகைமை யுடைய புலம்பெயர் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படல் வேண்டும். அத்தகைய வெளிநாட்டு முதலீடுகளின் கையுதிர்த்தல் வரும்படிகளை இலங்கைக்கு மீண்டும் கொண்டுவருவதற்கான ஆவண ரீதியான சான்றை புலம்பெயர்ந்தவர் சமர்ப்பிக்கின்றவிடத்தான சந்தர்ப்பங்களில் அத்தகைய முதலீட்டின் பெறுமதி தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படலாகாது.

10. பொதுவான இணங்குதல் தேவைப்பாடுகள்:

10.1. வெளிநாட்டு முதலீடுகளை அத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுகின்ற முதலீட்டாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் வேறு இடையீட்டாளர்கள் அடங்கலாக அனைத்து வதிபவர்களும் சட்டத்தின், ஒழுங்குவிதிகளின், கட்டளைகளின் அத்துடன் அவற்றின் கீழ் வழங்கப்படும் பணிப்புரைகளின் மற்றும் இலங்கையில் வேறு ஏற்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

10.2. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வெளிநாட்டு முதலீடுகள் எவ்வதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக மேற்கொள்ளப்படுகின்றதோ அத்தகைய எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணத்தை தாபித்து இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் பந்தி மீதான இணங்குதலை உறுதிசெய்தல் வேண்டும்.

10.3. மத்திய வங்கி, வெளிநாட்டு முதலீடுகள் நிறைவேற்றப்படுகின்ற போது சட்டத்தின், ஒழுங்குவிதிகளின், கட்டளைகளின் அத்துடன் அவற்றின் கீழ் வழங்கப்படும் பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்ளடங்கலாக அனைத்து வதிபவர்கள் தொடர்பிலும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

11. வரைவிலக்கணங்கள்:

இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக.-

11.1. "சட்டம்" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்.

11.2. "அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவராக சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வங்கியொன்று என்று பொருளாகும்.

11.3. "மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது சட்டத்தின் பொருளினுள் நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்றல்லாத கொடுக்கல்வாங்கல் ஒன்று என்று பொருளாகும்.

11.4. "மத்திய வங்கி" என்பது 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.5. "கொழும்பு பங்குப் பரிவர்த்தனை" என்பது பங்குப் பரிவர்த்தனையினைத் தொழிற்படுத்துவதற்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை என்று பொருளாகும்.

11.6. "நடைமுறை கொடுக்கல்வாங்கல்" என்பது இலங்கையினுள் அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி மாற்றலை அவசியப்படுத்துகின்ற அத்துடன் திருத்தப்பட்டவாறான பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரையின் XXX ஆம் உறுப்புரையின் (ஈ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் என்று பொருளாகும்.

11.7. "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்" என்பது 2024, யூன் 15 ஆம் திகதியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில்) கட்டளை மற்றும் ஏதேனும் அதனைத்தொடர்ந்துவந்த கட்டளைகளில் அல்லது அவற்றுக்கான திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள் என்று பொருளாகும்.

11.8. "புலம்பெயர்ந்தோர்" என்பது திருத்தப்பட்டவாறான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட குடியகல்பவர் மூலமான வெளிநாட்டுக்கான நிதிய மாற்றல்கள் மீதான ஒழுங்குவிதிகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.9. "ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டம்" என்பது இலங்கையிலுள்ள அதன் சொந்த ஊழியர்களுக்கு அல்லது இலங்கையிலுள்ள அதன் கிளையின் அல்லது துணைக் கம்பனியின் ஊழியர்களுக்கு அதன் பங்குகளை அல்லது இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட அதன் குழுமத்தின் கம்பனியொன்றின் பங்குகளை கையகப்படுத்துவதற்கு வாய் பொன்றினை வழங்குகின்ற இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் கீழான திட்டமொன்று அல்லது திட்ட ஏற்பாடொன்று என்று பொருளாகும்.

11.10. "இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு" என்பது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்று பொருளாகும்.

11.11. "உரிமம்பெற்ற வங்கி" என்பது திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியொன்று என்பது பொருளாகும்.

11.12. "உரிமம்பெற்ற நிதிக் கம்பனி" என்பது நிதித்தொழிலை நடாத்துவதற்காக, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ், திருத்தப்பட்டவாறு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியெனப் பொருள்படும்.

11.13. "தேறிய சொத்துக்கள்" என்பது கம்பனியின் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு அதன் மொத்தப் பொறுப்புக்களின், மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்குகளின் அத்துடன் சீர்மதிப்புப் பெறுமதி ஒதுக்குகளின் மொத்தத்தைக் கழித்து முதலீட்டாளரின் மொத்தச் சொத்துக்களின் விலைமதிப்பு என்று பொருளாகும்.

11.14. "வெளிநாட்டு அலுவலகங்கள்" என்பது இலங்கைக்கு வெளியில் தாபிக்கப்பட்ட கிளை, ஒருங்கிணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு அதனையொத்த அலுவலகங்கள் எனப் பொருள்படும்.

11.15. "இலங்கையில் வதிகின்ற ஆட்கள்" என்பது திருத்தப்பட்டவாறான 2213/40 ஆம் இலக்க 2021, பெப்புருவரி 03 ஆம் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அதிவிசேட அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையிலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.16. "இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும்.

EOG 06 - 0246

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது